ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2258/45 - 2021 දෙසැම්බර් මස 16 වැනි බ්‍රහස්පතින්දා - 2021.12.16
2258/45 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 16 ஆந் திகதி வியாழக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சார சபைச் சட்டம்

52 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சார சபைச் சட்டத்தின் 52 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, மின்சக்தி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரினால் செய்யப்பட்ட விதப்புரையின் மேலும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய நான் -

(அ) இதற்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட காணியானது, மின்சக்தி கடத்துகைக் கருத்திட்டமொன்றாக 220/132 கிலோவாற்று ஆளி தொழிற்படுத்தும் நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக அவசரமாகத் தேவைப்படுகின்றதும்;

அத்துடன்

(ஆ) சொல்லப்பட்ட மின்சக்தி கடத்துகைக் கருத்திட்டம் ஒரு பொது நோக்கமொன்றாகவிருப்பதனால் பொதுமக்களின் பொதுவான சேமநலத்துக்காகவும் நன்மைக்காகவும் அது பயனளிக்குமென்றும்,

அபிப்பிராயப்படுவதனால் சொல்லப்பட்ட காணி அத்தகைய நோக்கத்துக்காகத் தேவைப்படுகின்றதென இக்கட்டளை மூலம் வெளிப்படுத்துகின்றேன்.

**கோட்டாபய ராஜபக்ஷ,**
சனாதிபதி.

சனாதிபதி செயலகம்,
கொழும்பு 01.
2021, திசெம்பர் 16.

1A - G 35586 — 15 (2021/12)
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

வடமேல் மாகாணம் குருநாகல் மாவட்டத்தில் தேவமெதி ஹத் பத்துவில் உடுகஹா கோறளையின் பொல்கஹாவெலப் பிரதேச சபை எல்லைகளில், வீரம்புகெதர பிரதேச செயலாளர் பிரிவில் வீரம்புகெதர (869) கிராம அலுவலர் பிரிவில் தாவானி கெதர கிராமத்தில் அமைந்துள்ளதும் பம்பேவத்த என அழைக்கப்படும் காணியின் இலங்கை மின்சாரச் சபையினால் தயாரிக்கப்பட்டதும், 2021, யூலை 29 ஆந் தேதியிடப்பட்டதும், உருவரை CEB/PR/PD/PSRSPI/TE/DRG/002 இல் குறித்துக் காட்டப்பட்டதும், காணித்துண்டம் இல. A, காணித்துண்டம் இல. B, மற்றும் காணித்துண்டம் இல. C என்பவற்றைக் கொண்டுள்ளதும், பரப்பளவில் 13.0134 ஹெக்டேயர்களை (ஏ32 றூ00 பே25.12) கொண்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; அதன் எல்லைகள் பின்வருமாறு:

காணித்துண்டு இல A

வடக்கு : குறியமுல்ல மற்றும் பிரதேச சபை வீதி;
கிழக்கு : எலவழியான ஒதுக்கிடமும் கந்தேவத்த எனப் பெயரிடப்பட்ட காணியும்;
தெற்கு : கந்தேவத்த எனப் பெயரிடப்பட்ட காணி;
மேற்கு : கந்தேவத்த எனப் பெயரிடப்பட்ட காணி;

பரப்பளவு : 12.46487 ஹெக்டேயர்கள் (ஏ30. றூ3. பே8.22)
உரிமை கோருபவர் : குருநாகல், நீர்கொழும்பு வீதி, 111 ஆம் இலக்கத்தில் அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தை உடையதும், PV 105918 என்னும் கம்பெனிப் பதிவிலக்கத்தைக் கொண்டதும், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் முறையாகக் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்றாகவுள்ளதுமான எஸ். கே. இன்வெஸ்ட்மென்ட் சொலியூஷன்ஸ் (பிறைவேட்) லிமிடெட்.

காணித்துண்டு இல B

வடக்கு : 957 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் இல. 2;
கிழக்கு : காணித்துண்டு இல. C ;
தெற்கு : 957 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் இல. 1D மற்றும் 1E;
மேற்கு : எலவழியான ஒதுக்கிடம்.

பரப்பளவு : 0.28353 ஹெக்டேயர்கள் (ஏ00. றூ2. பே32.10)
உரிமை கோருபவர் : தெரியாது

காணித்துண்டு இல C

வடக்கு : 957 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் இல. 3A;
கிழக்கு : வீதி அபிவிருத்தி அதிகாரசபை வீதி (களுகமுவவிலிருந்து வாரியபொலவரை) ;
தெற்கு : 957 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் இல. 3A;
மேற்கு : காணித்துண்டு B.

பரப்பளவு : 0.26507 ஹெக்டேயர்கள் (ஏ00. றூ2. பே24.80)
உரிமை கோருபவர் : குருநாகல், நீர்கொழும்பு வீதி, 111 ஆம் இலக்கத்தில் அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தை உடையதும் PV 105918 என்னும் கம்பெனிப் பதிவிலக்கத்தைக் கொண்டதும், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் முறையாகக் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்றாகவுள்ளதுமான எஸ். கே. இன்வெஸ்ட்மென்ட் சொலியூஷன்ஷஸ் (பிறைவேட்) லிமிடெட்.

EOG 12-0168

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.